தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணைப் பரீட்சை - 2021
Conducted by Field Work Centre, Thondaimanaru.
1st Term Examination - 2021

| | | | | |
|---|---|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் / Communication & Media Studies | Three Hours / Gr -12 (2022) | 29 | T | I,II |

## பகுதி – I

❖ *1 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), 3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.*

01. "பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவிலிருந்து மாணவர்களுக்கு ஊடகக் கல்வி வழங்க வேண்டும்" என்று ஊடகக்கல்வியின் அவசியம் பற்றி பரிந்துரை செய்த அமைப்பு எது?
   1) ஐக்கிய நாடுகள் அமைப்பு
   2) சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்
   3) யுனெஸ்கோ அமைப்பு
   4) ஐரோப்பிய ஆணைக்குழு
   5) 1978 ஆவது அரசியல் அமைப்பு

02. தொடர்பாடல் கற்கையின் பிரதான நோக்கமாக அமைவது.
   1) மனிதனது பரிணாம வளர்ச்சியை ஆராய்தல்.
   2) தகவல் பரிமாற்ற முறைமைகளை ஆராய்தல்.
   3) மனிதனது அனுபவங்களின் மையப்புள்ளியாக தொடர்பாடல் செயற்படும் விதத்தை ஆராய்தல்.
   4) தொடர்பாடல் கற்கை பற்றிய ஆர்வத்தை ஏற்படுத்தல்.
   5) தொடர்பாடலின் அடிப்படைக் கூறுகளை ஆராய்தல்.

03. தொடர்பாடலின் இயல்பை அறிமுகம் செய்வதில் மிகப் பொருத்தமான கருத்தாக அமைவது.
   1) தொடர்பாடல் மொழியின் அடிப்படையிலானது.
   2) தொடர்பாடல் இடையூறுகளைக் கொண்டிருக்கும்.
   3) தொடர்பாடல் இருவழிச் செயன்முறையாகும்.
   4) தொடர்பாடல் ஓர் செயன்முறையாகும்.
   5) தொடர்பாடல் பிரதிபலிப்புகளின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

04. தொடர்பாடல் வழிமுறையின் கட்டமைப்பை அடையாளப்படுத்தக்கூடிய அடிப்படைக் கூறுகளாக அமைவன.
   1) தொடர்பியலாளர், செய்தி, ஊடகம்
   2) தொடர்பியலாளர், செய்தி, பெறுநர்
   3) தகவல் மூலம், தொடர்பியலாளர், பெறுநர்
   4) தொடர்பியலாளர், இடையூறு, பெறுநர்
   5) தொடர்பியலாளர், ஊடகம், பின்னூட்டம்

05. "கருத்து, ஆற்றல் என்பவற்றைப் பேச்சு அல்லது எழுத்து அல்லது குறியீட்டின் மூலம் முன்வைப்பது, வெளிப்படுத்துவது அல்லது பரிமாற்றுவதே தொடர்பாடலாகும்" எனும் தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணத்தை முன்வைத்தது,
   1) ஒக்ஸ்போட் அகராதி
   2) ஐரோப்பிய ஆணைக்குழு
   3) பிரித்தானிய கலைக்கழஞ்சியம்
   4) ஐக்கிய நாடுகள் சபை
   5) யுனெஸ்கோ அமைப்பு

06. தொடர்பாடல் கற்கை ஓர் துறைசார் கற்கையாகத் தோற்றம் பெறவும், ஆழமாகக் கற்கவும் பிரதான காரணமாக அமையாதது.

1) பூகோளமயமாக்கம் 2) தொடர்பாடல் தொழினுட்ப வளர்ச்சி
3) வெகுசன ஊடகங்களின் வளர்ச்சி 4) சமூகத்தில் ஊடகங்களின் தாக்கம்
5) புதிய ஊடகங்களின் வருகை

07. பின்வருவனவற்றுள் எது தொடர்பாடலின் அடிப்படைக் கூறாக அமையாதது?

1) தொடர்பாடுநர் 2) பெறுநர் 3) இடையூறு
4) வாயிற்காப்போர் 5) பின்னூட்டம்

08. "யாதேனுமொரு நபர், யாதேனுமொரு விடயத்தை, யாதேனுமொரு ஊடகத்தினூடாக, யாதேனுமொருவருக்கு, யாதேனுமொரு விளைவை ஏற்படுத்துவதற்காக கூறுதல் தொடர்பாடலாகும்" எனும் விளக்கத்தை முன்வைத்தவர்.

1) வில்பர் ஷ்ராம் 2) எட்வேட் சபீர் 3) ஷெனோன் மற்றும் வீவர்
4) ஹைரோல்ட் டீ.லாஸ்வெல் 5) டேவிட் கே.பெர்லோ

09. இலங்கையில் தொடர்பாடல் பாடத்தை முதன் முதல் அறிமுகம் செய்வதில், கல்வி அமைச்சராக இருந்து மும்முரமாகச் செயற்பட்டவர்.

1) கலாநிதி எட்வின் ஆரியதாச 2) பேராசிரியர் விமல் திசாநாயக்க
3) பேராசிரியர் சுனந்த மகேந்திர 4) எம். ஆர். ஏ. ஈரியகொல்ல
5) பேராசிரியர் எம். பீ. ஆரியபால

10. எமது உள்ளத்தில் எழும் கருத்து, உணர்வு என்பவற்றை இன்னொருவர் விளங்கிக் கொள்ளும் ஒரு தகவலாக மாற்ற வேண்டும். இவ்வாறு தகவலாக மாற்றும் செயன்முறை எவ்வாறு அழைக்கப்படும்.

1) குறிமுறை அவிழ்ப்பு 2) பின்னூட்டம் 3) விளைவு
4) தகவல் 5) குறிமுறையாக்கம்

11. மிகப் பழையகால தொடர்பாடல் முறைகளை சரியாகக் காட்டுவது.

1) தீ, புகை, பப்பிரஸ் ஓலைகள்.
2) சமிக்ஞைகள், கடிதம், கம்பியில்லாத் தொலைபேசி.
3) குறியீடுகள், புடைவை, கடதாசி.
4) தொலைபேசி, தீ, புகை.
5) சமிக்ஞைகள், குறியீடுகள், தொலைநகல்.

12. தொடர்பாடலின் இயல்புகளுடன் பொருந்தாத கூற்றை தெரிவு செய்க.

1) தொடர்பாடல் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு இயைவற்றது.
2) தொடர்பாடல் குறிக்கோளைக் கொண்டது.
3) தொடர்பாடல் குறியீட்டு பாவனையுடையது.
4) தொடர்பாடல் ஓர் சக்தியாகும்.
5) தொடர்பாடல் ஓர் செயன்முறையாகும்.

13. சிங்கள மொழியில் தொடர்பாடலை சன்னி வேதைய என அழைப்பர். "சன்னிவேதயை" என்பதன் அர்த்தம்.

1) தகவல் பரிமாற்றம் 2) தொடர்புகளை ஏற்படுத்தல் 3) நன்றாகத் தெரியப்படுத்தல்
4) அறிந்ததை அறியப்படுத்தல் 5) பொதுவான தாக்குதல்

14. பின்வருவனவற்றுள் எது தொடர்பாடலின் அடிப்படைக்கூறாக அமையாதது?

1) விளைவு / தாக்கம் 2) இடையூறு 3) பின்னூட்டம்
4) சூழல் 5) மாதிரி

15. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதன் முதலில் இதழியல் பாடத்துறை ஆரம்பிக்கப்படுவதற்கு பிரதான பங்களிப்பாற்றிய கல்வியியலாளர்கள் முறையே.

1) பேராசிரியர் விமல் திசாநாயக்க, பேராசிரியர் சுனந்த மகேந்திர.
2) பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் கா.சிவத்தம்பி.
3) கலாநிதி எட்வின் ஆரியதாச, கலாநிதி பியசோம.
4) பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் சுனந்த மகேந்திர.
5) பேராசிரியர் எம்.பீ.ஆரியபால, பேராசிரியர் கா.சிவத்தம்பி

16. வெகுசனத் தொடர்பாடலின் பணிகள் / நோக்கங்களுடன் பொருந்தாத கூற்றை தெரிவு செய்க.

1) கண்காணித்தல் 2) விளக்கமளித்தல்
3) இடைத்தொடர்புகளை ஏற்படுத்தல் 4) சமூகமயமாக்கல்
5) முரண்பாட்டை தோற்றுவித்தல்

17. வன்முறையுடன் கூடிய கார்ட்டூன் நிகழ்ச்சிகளை சிறுவர்கள் பார்வையிடுவதால், ஆக்கிரமிப்பு, முரண்பாடு, போன்ற மனப்பாங்கு ஏற்படுவதாக தனது ஆய்வறிக்கையின் மூலம் உறுதிப்படுத்திய பல்கலைக்கழகம்.

1) சிக்காக்கோ இலினோயிஸ் பல்கலைக்கழகம்.
2) பெல்சிலவேனியாப் பல்கலைக்கழகம்.
3) களனிப் பல்கலைக்கழகம்.
4) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
5) தெஹிவளை கனிஸ்ட பல்கலைக்கழகம்.

18. ஆசிரியர் வகுப்பறையில் கற்பித்துக் கொண்டிருந்த போது அருகிலிருந்த வகுப்பு மாணவர்களின் மிகையொலியினால் கூறும் விடயத்தினை சரிவர மாணவர்களினால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. இதனை வெளிப்படுத்தும் அடிப்படை அம்சம்.

1) அனுபவக்களம் 2) பின்னூட்டம் 3) சந்தர்ப்பம் / சூழல்
4) பொருட்கோடல் 5) இடையூறு / இரைச்சல்

19. பின்வருவனவற்றில் தொடர்பாடலின் முதன்மையான பணிகளுள் உள்ளடங்காதது.

1) தகவல் வழங்குதல் 2) மகிழ்வூட்டல் 3) கல்வியறிவூட்டல்
4) தூண்டலை ஏற்படுத்தல் 5) கண்காணித்தல்

20. பொதுவாக தொடர்பாடல் என்பதன் அர்த்தமாவது.

1) பொதுவானதாக்குதல் 2) அறிந்ததை அறியப்படுத்துதல்
3) நன்றாகத் தெரியப்படுத்துதல் 4) தகவல் இடைத்தொடர்பாக்கம்
5) செய்திப்பரிமாற்றம் ஆகும்

21. உலகளாவிய ரீதியில் அதிகளவான மக்கள் பயன்படுத்தும் சமூக ஊடகம்.

1) முகநூல் 2) ருவிற்றர் 3) லிங்கிடின்
4) பிறின்ரெஸ்ட் 5) இன்ஸ்ரகிராம்

22. தொடர்பாடல் செயலொழுங்கில் குறிமுறையாக்கம், குறிமுறையவிழ்ப்பு தொடர்பாக முதன் முதலில் கருத்தியலை உருவாக்கிய அறிஞர்கள்.
   1) சாள்ஸ் ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்.
   2) ஹெரோல் பீ.லாஸ்வெல்.
   3) குளோட் ஷனேன் மற்றும் வொரன் வீவர்.
   4) அரிஸ்ரோட்டில்
   5) போல் லாசர் பீல்ட்

23. உலகளாவிய ரீதியில் பரந்துபட்ட மக்களிடையே தொடர்பாடல் விருத்தி ஏற்படுவதற்கான பிரதான காரணி.
   1) தொலைக்காட்சியின் வரவு
   2) கல்வி அறிவு அதிகரிப்பு
   3) சமூக வலைத்தளப் பாவனை
   4) சமூகமயமாக்கம்
   5) ஆங்கில மொழிப் பரவல்

24. தொடர்பாடல் பாடம் “தொடர்பாடல் கற்கை” எனும் தனித்துறையாக வளர்வதற்கு முன்னின்றுழைத்த மானிட, சமூக, அரசியல் விஞ்ஞானிகள் முறையே.
   1) சார்ள்ஸ் ஹோட்டன் கூலி, லாஸ்வெல், ஷெனோன் மற்றும் லீவர்.
   2) சார்ள்ஸ் ஹோட்டன் கூலி, வோல்ட்டர் லிப்மன், ஜோன் டூவி.
   3) ஜோன்டூவி, லாஸ்வெல, அரிஸ்ரோட்டில்.
   4) அரிஸ்ரோட்டில், வோல்ட்டர் லிப்மன் லாஸ்வெல்.
   5) ஒஸ்குட் ஷ்ராம், ஷெனோன் மற்றும் வீவர், அரிஸ்ரோட்டில்.

25. தொடர்பாடல் துறை பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்ட பொறியியல் துறைசார்ந்த வல்லுநர்கள்.
   1) ஹரோல்ட் டீ.லாஸ்வெல், கேர்ட்லெவின்.
   2) போல் எப்.லஸார்பெர்ல்ட், அரிஸ்ரோட்டில்.
   3) ஜோர்ஸ் கெப்னர், ஒஸ்குட்.
   4) ஜோன் டூவி, வோல்ட்டர், லிப்மன்.
   5) குளொட்ஷனன், வொரன் வீவர்.

(25x1=25 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01. ''நவீன யுகத்தில் உலகம் ஒரு குடும்பமாகச் சுருங்கும் வண்ணம் மனித இடைத்தொடர்புகள் வலுப்பெறுவதற்கு தொடர்பாடலின் வளர்ச்சியே காரணம் ஆகும்.''

1) தொடர்பாடல் என்பதன் பொருள் யாது? (2 புள்ளிகள்)

2) தொடர்பாடலை ஓர் துறைசார் கற்கையாக கற்பதன் அவசியத்தை சுருக்கமாகக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

3) தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்தினை உயர்தரத்தில் கற்று வருவதன் மூலம் உமது ஆளுமைப் பண்பில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பில் உதாரணங்களுடன் சுருக்கமாகக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

4) இலங்கையில் தொடர்பாடல் பாடம் அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து தற்போது வரை அதனுடைய வளர்ச்சிப் போக்கினை எடுத்துக்காட்டுக்களுடன் சுருக்கமாக விபரிக்குக. (6 புள்ளிகள்)

02. ''மனிதனது அனுபவங்களின் மையப்புள்ளியாகத் தொடர்பாடல் செயற்படுகின்றது''

1) ''தொடர்பாடல் கற்கை'' தனித்துறையாக வளர்வதற்கு பங்களிப்புச் செய்த அறிஞர் மூவரைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2) தொடர்பாடல் பற்றிய சார்ள்ஸ் ஹோட்டன் கூலியின் வரைவிலக்கணம் யாது? (3 புள்ளிகள்)

3) முதலாம், இரண்டாம் உலகயுத்த காலப்பகுதியில் தொடர்பாடலின் கருப்பொருளாக அமைந்த பணிகளைச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

4) தொடர்பாடல் கற்கைநெறி வளர்ச்சியடைய பங்காற்றிய மேலைத்தேய மற்றும் கீழைத்தேய அறிஞர்களுடைய பங்களிப்பினை சுருக்கமாக விபரிக்குக. (6 புள்ளிகள்)

03. 1) இலங்கையில் தொடர்பாடல் கற்கை வளர்வதற்குத் துணைபுரிந்த தமிழ், சிங்கள நிபுணர்கள் நால்வரைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2) இலங்கையில் தற்காலத்தில் தொடர்பாடல் கற்கை தொடர்பான பாடநெறிகளை வழங்கும் பல்கலைக்கழகங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

3) யுனெஸ்கோவின் குருன்வெல்ட் பிரகடனத்தை முதன்மைப்படுத்தி, இலங்கையில் தொடர்பாடல் கற்கைநெறியின் வளர்ச்சிப் போக்கினை சுருக்கமாக ஆராய்க. (4 புள்ளிகள்)

4) ஊடகங்களால் சமூகத்தில் ஏற்படும் தாக்கம் பற்றி எடுத்துரைக்க. (6 புள்ளிகள்)

04. ''தொடர்பாடல் என்பது கருத்துக்களைப் பரிமாற்றுதல் ஆகும்''

1) தொடர்பாடல் பற்றிய வில்பர் ஷ்ரம் இனது வரைவிலக்கணத்தைத் தருக. (2 புள்ளிகள்)

2) தொடர்பாடலின் அடிப்படை அம்சங்கள் நான்கினைக் குறிப்பிட்டு, அவற்றுள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. (3 புள்ளிகள்)

3) தொடர்பாடலின் இயல்புகள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

4) மானிடத் தொடர்பாடலானது வளர்ச்சியடைந்த விதம் பற்றி விபரிக்குக. (6 புள்ளிகள்)

05. "தொடர்பாடலினை மேற்கொள்ளும் போது நாம் பல்வேறுபட்ட தடைகளிற்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது"

1) தொடர்பாடல் குறுக்கீடுகள் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

2) தொடர்பாடலின் குறுக்கீடுகளின் பிரதான வகைகளைக் குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக. (3 புள்ளிகள்)

3) தொடர்பாடலின் தடைகளினால் ஏற்படக்கூடிய தாக்கங்களை உதாரணங்களுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

4) தொடர்பாடலின் முதன்மையான பணிகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

06. 1) "குரூன்வெல்ட் பிரகடனம்" என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது? (2 புள்ளிகள்)

2) பெல்சில்வேனியா பல்கலைக்கழக ஆய்வாளர்களால் முன்மொழியப்பட்ட வன்முறையுடன் கூடிய காட்டூன் நிகழ்ச்சிகளைப் பார்வையிடும் சிறுவர்களில் ஏற்படும் மாற்றங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)

3) தொலைக்காட்சி ஊடகம் சிறுவர்களிடையே ஏற்படுத்தும் தாக்கம் பற்றி விளக்குக. (4 புள்ளிகள்)

4) ஊடக விளம்பரங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் சாதக, பாதக விளைவுகள் நான்கினைக் குறிப்பிட்டு, இரண்டினை விளக்குக. (6 புள்ளிகள்)

07. 1) தொடர்பாடலினை ஓர் துறைசார் பாடமாக கற்பிக்கும் முயற்சியை உலகளாவிய ரீதியில் முதன் முதலாக மேற்கொண்ட பல்கலைக்கழகம் எது? (2 புள்ளிகள்)

2) தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணங்களை முன்வைத்த அறிஞர் நால்வரைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

3) தொடர்பாடல் என்பதனை பொருள் விளங்கும் வண்ணம் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

4) வெகுசன ஊடகங்களின் வருகையுடன் தொடர்பாடலும் விரிவாக்கம் பெற்றது. வெகுசனத் தொடர்பாடலின் பணிகள் / நோக்கங்கள் நான்கினைக் குறிப்பிட்டு, அவற்றுள் இரண்டினை விளக்குக. (6 புள்ளிகள்)